பதிவு எண். M 6311 ★ தொலைபேசி: 61331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

[illegible]: இரா. செழியன் [illegible]

மலர்: 19] சென்னை: கார்த்திகை 10 (26—11—71) வெள்ளி    வெளியூர்: கார்த்திகை 11 (27—11—71) சனி [இதழ்: 137

## ரிசர்வ் போலீசார்மீது ஒழுங்கு நடவடிக்கை

### மத்திய அமைச்சர் தகவல்

புதுடில்லி, நவ. 25—

"மத்திய அரசின் ரிசர்வ் போலீசுக்காரர்கள் 1,548 பேர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது; 1969 சனவரி முதல் 1971 ஜூலை முடிய இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன" என்று நாடாளுமன்றத்தில், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் உள்துறை துணையமைச்சர் மோசின் தெரிவித்தார்.

# பிரிட்டனிடம் யாகியா கான் அபயம்

## இந்தியா ஆக்கிரமிப்பில் ஈடுபடுவதாகப் புரளி

### 'போர் மூளுவதைத் தவிர்க்க வேண்டும்' எனக் கோரிக்கை

புதுடில்லி, நவ, 26—

"இந்தியத் துணைக்கண்டத்தில் இந்தியா—பாகிஸ்தான் இடையே நிலவிவரும் உறவு நிலை சீரழிந்துவருவதைத் தடுக்கவும், போர் மூளுவதைத் தவிர்க்கவும் தனது செல்வாக்கைப் பயன்படுத்தவேண்டும்" என்று பிரிட்டனைப் பாகிஸ்தான் கேட்டுக்கொண்டிருக்கிறது.

இலண்டனிலுள்ள பாகிஸ்தான் தூதுவர் ஜெனரல் முகமது யூசுப் என்பவர், நேற்று பிரிட்டிஷ் தலைமையமைச்சரிடம், அவசரச் சந்திப்புக்கு நேரம் ஒதுக்கப்பட வேண்டுமென்று தொலைபேசி மூலம் கேட்டுக்கொண்டார்; அதனை ஏற்றுக்கொண்ட பிரிட்டிஷ் தலைமையமைச்சர், தமது நிகழ்ச்சி நிரல்களை மாற்றியமைத்துப் பாகிஸ்தான் அதிபருக்கு 15 நிமிட நேரம் பேட்டியளித்திருக்கிறார்.

அதுபோது பாகிஸ்தான் தூதுவர் பிரிட்டிஷ் தலைமையமைச்சரிடம், அதிபர் யாகியா கான் அனுப்பிய செய்தி ஒன்றை அளித்தார் என்று கூறப்படுகிறது.

அச்செய்தியில், 'இந்தியாவின் ஆக்கிரமிப்பைத் தடுத்து நிறுத்த'ப் பிரிட்டன் முயற்சி செய்யும் என்று தாம் நம்புவதாக யாகியா கான் தெரிவித்திருக்கிறார் என்று கருதப்படுகிறது.

## நினைவூட்டுகிறோம்

நவம்பர் 27 சனிக்கிழமை இரவு 7-மணி முதல் 9 மணி வரையில்

### விளக்கணைப்புப் பயிற்சி நாள்

உங்கள் வீட்டு விளக்கு வெளிச்சம் வெளியில் தெரியாமல் செய்திடுவீர்!

உங்கள் ஊர்திகளின் விளக்கு வெளிச்சத்தைக் குறைக்க ஏற்பாடு செய்திடுவீர்!

பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு நல்கிடுவீர்!

# போரை விரும்பாதது உண்மையானால்...

## வங்க தேசத்துக்கு அரசியல் தீர்வு காணவேண்டும்

### பாகிஸ்தான் அதிபர் யாகியா கானுக்கு இந்தியப் பாதுகாப்புத் துறை அமைச்சர் அறைகூவல்

அரியானாவில் பொதுக்கூட்டம் ஒன்றில் பேசுகையில் இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஜெகஜீவன்ராம், 'சுதந்தரத்தைத் தவிர வேறு எதுவும் வங்கதேச மக்களைத் திருப்திப்படுத்தாது' என்று கூறியிருக்கிறார்.

"போர் தேவையில்லை என்றால், உடனடியாக ஓர் அரசியல் தீர்வுக்குப் பாகிஸ்தான் முயற்சிக்க வேண்டும்" என்று அவர் தெரிவித்தார்.

## 'முஜிபுர் ரகிமானை விடுதலை செய்க'

### வங்க தேசப் பிரச்சினைக்குத் தீர்வு காண வழி-- பாகிஸ்தானுக்கு அதிபர் நிக்சன் புத்திமதி

"வங்க தேசத் தலைவர் முஜிபுர் ரகிமானை விடுதலைசெய்து-- அவரிடம் தனியாகப் பேசி வங்க தேசப் பிரச்சினைக்குத் தீர்வு காணுமாறு அதிபர் யாகியா கானுக்குக் கடிதம் ஒன்று எழுத அமெரிக்கக் குடியரசுத் தலைவர் நிக்சன் திட்டமிட்டிருக்கிறார்" என்று வாஷிங்டன் செய்தி ஒன்று கூறுகிறது.

## இரஷ்யாவுடன் அமெரிக்கா ஆலோசனை

### பதட்ட நிலை தணிய இரஷ்ய அமைச்சர் கூறிய யோசனை

மாஸ்கோவிலுள்ள அமெரிக்கத் தூதுவர், இரஷ்ய வெளியுறவு அமைச்சகத்துடன், இந்தியா—பாகிஸ்தான் இடையே நிலவிவரும் பதட்ட நிலை குறித்து விவாதம் நடத்தினர்.

'பதட்ட நிலைக்கு அடிப்படைக் காரணம், வங்க தேச அரசியல் சூழ்நிலையே" என்று, அப்போது இரஷ்யத் தரப்பினர் மீண்டும் விளக்கினர்.

"ஆகவே, இந்தப் பதட்ட நிலை தணிவதற்கு முஜிபுர் ரகிமானை விடுதலை செய்யப் பாகிஸ்தானை இணங்கச் செய்யும் பொருட்டு அமெரிக்கா தனது செல்வாக்கைப் பயன்படுத்தலாம்" என்றும் இரஷ்யா கூறியிருக்கிறது.

சில நாட்களாகவே இப்பிரச்சினை குறித்து அமெரிக்கா, இரஷ்யாவுடன் தொடர்பு கொண்டுவருவதாக, அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

## பேச்சு நடத்தத் தயாராம்

### யாகியா கானின் பசப்பல்

பாகிஸ்தானில் உள்ள இந்தியத் தூதுவர் ஜே. கே. அதால், இந்திய அரசிடம் கலந்து பேசிவிட்டு மீண்டும் பாகிஸ்தானுக்குத் திரும்பியிருக்கிறார்.

தலைமையமைச்சர் இந்திரா காந்திக்கு யாகியா கானின் கடிதம் ஒன்றை அவர் கொண்டு வந்திருந்தார். வங்க தேசப் பிரச்சினை குறித்து இந்தியாவுடன் கலந்துபேசுவதற்குத் தாம் தயாராக இருப்பதாக மீண்டும் அக்கடிதத்தில் யாகியா கான் தெரிவித்திருக்கிறார்.

**ஆனால், வங்க தேசப் பிரச்சினை பற்றிய பேச்சுவார்த்தையை, வங்க தேசத் தலைவர்களுடன்தான் கலந்து பேச வேண்டும்' என்ற இந்தியாவின் கருத்துக்கு எவ்விதச் சாதகமான பதிலையும் யாகியா கான் அக்கடிதத்தில் குறிப்பிடவில்லை.**

ஆகவே மத்திய அரசு, இந்தக் கடிதத்தை முக்கியமாகக் கருதவில்லை.

'போரைத் தவிர்ப்பதற்குப் பாகிஸ்தான் எல்லாவித முயற்சிகளையும் எடுத்தது' என்று உலக நாடுகளிடம் தவறான கருத்தை உருவாக்குவதற்காகவே யாகியா கான் இந்தக் கடிதத்தை எழுதியிருப்பதாகக் கருதப்படுகிறது.

## சீனாவின் மனக் குழப்பம்

### வங்க தேசம் பற்றிய பாகிஸ்தான் கூற்றை நம்பவில்லை

பீகிங், நவ. 26--

வங்க தேச சிக்கல், சீனாவைக் குழப்பியிருக்கிறது; இப்பிரச்சினையை எப்படி அணுகுவது என்பதைச் சீனாவால் முடிவு செய்ய முடியவில்லையாம்.

பாகிஸ்தானைச் சீனா ஆதரித்தபோதிலும், 'இந்தியாதான் இதற்குக் காரணம்' என்று பாகிஸ்தான் கூறுவதை முழுவதுமாக ஏற்றுக்கொள்ளவில்லை.

இது வரையிலும், பாகிஸ்தானின் இந்தக் குற்றச்சாட்டுக்குச் சீன வானொலி விமரிசனம் செய்யவில்லை என்பது சுட்டிக்காட்டப்படுகிறது.

**நேற்று பீகிங்கில் உள்ள பாகிஸ்தான் தூதுவர், தலைமையமைச்சர் சூ யென்-லாயிடம், யாகியா கானின் கடிதம் ஒன்றைத் தாக்கல் செய்திருக்கிறார்.**

இச்செய்தியைத் தெரிவித்த பீகிங் வானொலி, கிழக்குப் பாகிஸ்தான் எல்லையில் இந்தியா இராணுவ ஆத்திரமூட்டல்களில் ஈடுபட்டிருப்பதால், சூ-யென்-லாய் மிகுந்த கவலை தெரிவித்திருப்பதாகக் கூறியது; கிழக்குப் பாகிஸ்தானில் இந்தியா ஊடுருவல் செய்து வருகிறது என்று அது கூறாமலிருந்தது முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

**ஏனெனில் கிழக்கு வங்கப் போராட்ட வீரர்கள் குறித்து சீனா ஏதும் இதுவரையில் குறிப்பிடவில்லை.**

**கிழக்கு வங்க மக்களைப் பகைத்துக்கொண்டு அவர்களின் ஆதரவை இழக்கவும் முடியாமல் -- பாகிஸ்தானின் நட்புறவை இழக்கவும் முடியாமல் சீனா குழம்பிப் போயிருக்கிறதாம்.**

## இரஷ்யாவின் புதிய வேண்டுகோள்

இந்தியத் துணைக் கண்டத்தில் அமைதி நிலவ ஏனைய உலக அரசுகள் முயற்சிப்பதை இரஷ்யா வரவேற்கிறது; ஏனெனில், இங்கு அமைதி நிலவ வேண்டிய தன் அவசியத்தில் இரஷ்யாவுக்குத் தனிப் பொறுப்பு உண்டு.

இரஷ்யா இப்போது புதிய வேண்டுகோள் ஒன்றையும் பாகிஸ்தானுக்கு விடுத்திருக்கிறது; வங்க தேச விடுதலைக் கிளர்ச்சித் தலைவர்களிடம் கலந்து பேசி அமைதிக்கு வழிகாணுமாறு அதில் இரஷ்யா கேட்டுக் கொண்டிருக்கிறது.

## சியால்கோட்டில் ஊரடங்கு உத்தரவு

ஜம்மு, நவ. 26—

மேற்குப் பாகிஸ்தானில் உள்ள நகரான சியால்கோட்டில் மீண்டும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இந்திய எல்லையிலிருந்து 18 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள இந்த நகரத்தில், கடந்த செவ்வாய் முதற்கொண்டு 'முழு இருட்டடிப்பு' நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு உள்ளதாகச் செய்தி கிடைத்துள்ளது.

சியால்கோட், டாக்ஷா, சலீண்டா, நாரோவால் ஆகிய நகரங்களின் மக்கள், ஒரு மாதத்திற்கு முன்பே வேறிடங்களுக்கு வெளியேற்றப்பட்டுவிட்டனர்.

## ஜெஸ்சூர் இராணுவத் தளம் பிடிபடும்

### விடுதலைப் படையின் வீரஞ்செறிந்த போர்

கல்கத்தா, நவ. 26—

கிழக்குப் பாகிஸ்தானில், பாகிஸ்தான் இராணுவத்துக்கும்---வங்க தேச விடுதலைப் படைக்கும் கடும் போர் நடந்துவருகிறது.

முக்கிய நகரான ஜெஸ்சூரை முற்றுகையிட்டுத் தாக்க விடுதலைப் படை நெருங்கிவிட்டது; தாக்குப்பிடிக்க முடியாமல் பாகிஸ்தான் இராணுவம் ஜெஸ்சூரைவிட்டு ஓட ஆயத்தமாகிவிட்டதாகவும் கூறப்படுகிறது.

ஜெஸ்சூரில்தான் கிழக்குப் பாகிஸ்தானின் முக்கிய இராணுவத் தளம் உள்ளது; எனவே, இந்த நகரத்தைப் பிடிக்க விடுதலைப் படை மும்முரமான போரில் ஈடுபட்டிருக்கிறது.

வங்க தேசத்தில் 12,000 சதுர கிலோமீட்டர் பரப்புள்ள பகுதியை விடுதலைப் படை மீட்டுவிட்டது; 45 போலீசு நிலையப் பகுதிகளில் வங்காள தேச அரசின் நிர்வாகமே நடந்துவருகிறது; அங்கு மக்களிடம் வங்க தேச அரசு வரி வசூல் செய்யும் பணியிலும் ஈடுபட்டுள்ளது.

# சரக்கு குறைந்து நட்டம் ஏற்படுவதைத் தடுக்க நடைமுறை வகுப்பது அவசியம்

## 'ஏற்பட்டுவரும் மாறுதல்களைக் கண்டறியும் நிலையில் கூட்டுறவுக் கடைகள் இயங்க வேண்டும்'

### கருத்தரங்கில் அமைச்சர் சி. பா. ஆதித்தனார் வற்புறுத்தல்

சென்னை, நவ. 25—

"கூட்டுறவுக் கடைகளில் மாதந்தோறும் சரக்குக் கையிருப்பைக் கணக்கெடுத்து, இலாப -- நட்டம் பார்க்கவேண்டும்; அப்படிச் செய்தால், களவுகள் மூலம் சரக்குகள் குறைந்து நட்டம் ஏற்படுவதைத் தடுக்கலாம்.

"கூட்டுறவுக் கடைகள் மாதாமாதம் தங்களுக்கு ஏற்பட்டுள்ள இலாப -- நட்டம் பற்றித் தோராயமாகவாவது பதிவாளருக்கு அறிக்கைகள் அனுப்பிவர வேண்டும்.

"கையிருப்புக் கணக்கு எடுப்பது -- சரக்குக் கொள்முதல் நடைமுறைகள் ஆகியவை தொடர்மாகச் சரியானதோர் முறையை வகுத்துக்கொள்ள வேண்டும்; மாதாமாதம் இலாப -- நட்டப் போக்கில் ஏற்பட்டுவரும் மாறுதல்களைத் திட்டவட்டமாகக் கண்டறியக்கூடிய நிலையில் கூட்டுறவுக் கடைகள் இருக்கவேண்டும்.

"நமது மாநிலத்தில் மொத்தம் 30 கூட்டுறவு மொத்த விற்பனை நிலையங்கள் உள்ளன; இதில் 15 நிலையங்கள் நட்டத்தில் நடப்பதாக மதிப்பிடப்படுகிறது.

"அரசு வரவு -- செலவுத் திட்டத்தில் கூட்டுறவுக் கடைகளுக்காக நிதி ஒதுக்கப்படுகிறது; இவற்றுக்குக் கடனுதவியோ அல்லது மானிய உதவியோ அளிப்பதற்குப் பதிலாக இந்தச் சங்கங்களில் பங்குகள் வாங்குவதையே அரசு விரும்பும்"

**என்று கூட்டுறவுத் துறை அமைச்சர் சி. பா. ஆதித்தனார் அவர்கள், தமிழ்நாடு கூட்டுறவுச் சங்க ஆதரவில் நடைபெற்ற கூட்டுறவுப் பண்டகசாலைகள் பற்றிய கருத்தரங்கு நிறைவு விழாவில் சுட்டிக்காட்டித் தெரிவித்தார்.**

### பி. எம். பெல்லியப்பா

"கூட்டுறவு நிறுவனங்கள் நெளிவுசுளிவுடன் இயங்கவும், கொள்முதல் -- விற்பனை ஏற்பாடுகளை விரைவுபடுத்தவும் தக்கவாறு கூட்டுறவு சங்கங்கள் பற்றிய சட்டத்தில் திருத்தம் செய்யவேண்டும்; கூட்டுறவுத் துறையில் பயன்படுத்துவோர் பிரிவு சீரான வளர்ச்சியைக் காணவில்லை"

என்று பதிவாளர் பி. எம். பெல்லியப்பா, கருத்தரங்கை துவக்கி வைத்துப் பேசுகையில், சுட்டிக்காட்டினார்; அவர் மேலும் குறிப்பிட்டதாவது :—

"மாநிலத்திலுள்ள 12 சூப்பர் மார்க்கெட்டுகளில் பாதிதான் இலாபகரமாக நடக்கின்றன; சில சொற்ப இலாபத்துடனும், மற்றவை பெரும் நட்டத்திலும் நடந்து கொண்டிருக்கின்றன; எல்லாம் ஒரே அமைப்பின்கீழ் செயல்படுகையிலேயே இந்நிலைமை இருக்கிறது.

கூட்டுறவுச் சங்க ஊழியர்களுக்கு விற்பனையைப் பெருக்க ஊக்கம் அளிக்கவேண்டும்; விற்பனை முறைகள் குறித்து மறு பயிற்சி வகுப்புகள் நடத்தலாம்."

### வி. எஸ். கோவிந்தராசன்

மாநிலப் பயன்படுத்துவோர் கூட்டுறவுக் கழகத் தலைவர் வி. எஸ். கோவிந்தராசன் தலைமை வகித்துப் பேசுகையில், 'வெளி மாநிலங்களில் நடுவாந்தரக்காரர்களின்றிக் கொள்முதல் செய்யத் தேசியக் கூட்டுறவுக் கழகமும் -- மத்திய கொள்முதல் நிறுவனங்களும் உதவவேண்டும்' என்று கேட்டுக் கொண்டார்.

"இப்போது வருமான வரி விலக்கு வரம்பு ரூ 20,000-ஆக இருப்பது சிறிய சங்கங்களுக்கு மட்டுமே உதவுகிறது" என்று சுட்டிக் காட்டினார்.

"மாநிலத்தின் மொத்த மக்கள் தொகை 4.50 கோடியில் 4 இலட்சம் பேர்தான் இந்த இயக்கத்தில் பங்கு கொண்டிருக்கிறார்கள்; இயக்கத்துக்கு நல்ல பிரச்சாரமும் எல்லா மட்டங்களிலும் தனிப் பயிற்சியும் தேவை" என்றார்.

மாநிலத்தில் 1,669 முதல்நிலை கூட்டுறவுப் பண்டகசாலைகள் உள்ளன; இவற்றின் பங்கு மூலதனம் ரூ. 154 இலட்சமாகும்; இவை மொத்தம் ரூ. 30 கோடிக்கு வியாபாரம் செய்கின்றன.

கூட்டுறவுச் சங்கத் தலைவர் டாக்டர் பி. நடேசன் அனைவரையும் வரவேற்றார்.

கொளத்தூர் கோதண்டம் எம்.எல்.சி. நன்றி கூறினார்.

## அரசு டாக்டர்கள்

### தனியாகத் தொழில் நடத்த மைசூர் அரசு தடை

பெங்களூர், நவ. 25—

அரசாங்க டாக்டர்கள் சொந்தத்தில் தனியாகத் தொழில் நடத்துவதற்கு மைசூர் அரசாங்கம் தடை விதித்திருக்கிறது.

இந்த தகவலை, மைசூர் கவர்னர் தர்மவீரா நேற்று அறிவித்தார்.

உடனடியாக இந்தத் தடையுத்தரவு நடைமுறைக்கு வருவதாகவும், இது கடுமையாகச் செயல்படுத்தப்படும் என்றும், தடையை மீறுபவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

## பருத்தி இறக்குமதி

### ரூ. 10 கோடி அந்நியச் செலாவணி அனுமதி

கோவை, நவ. 25—

எகிப்து, சூடான் ஆகிய நாடுகள் தவிர இதர வெளிநாடுகளிலிருந்து ஓர் இலட்சம் கச்சாப் பருத்திப் பொதிகளை இறக்குமதி செய்வதற்காக ரூ. 10 கோடி மதிப்புக்கு அந்நியச் செலாவணியை மத்திய அரசு வழங்கியிருக்கிறது.

எகிப்து -- சூடான் ஆகிய நாடுகளுடன் இந்திய அரசு ஏற்கனவே இத்துறையில் வர்த்தக ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கிறது.

# சூழ்நிலைகளாலேயே குற்றவாளிகளாகின்றனர்

## நல்ல குடிமக்களாகத் திகழ்வதற்கான சூழ்நிலை ஏற்படுத்துவது அவசியம்

### அமைச்சர் செ. மாதவன் கருத்துரை

சென்னை, நவ. 26—

"குற்றவாளிகளிடையே சிறந்த பண்புகள் உருவாக்கப்பட வேண்டும் -- அவர்களும் எதிர்காலத்தில் சிறந்த குடிமகன்களாக விளங்க வேண்டும் -- என்பதுதான் தமிழக அரசின் கொள்கையாகும்.

"குற்றவாளி -- எனத் தீர்மானிக்கப்படுமுன் காவலில் வைக்கப்படுபவர்களை, சிறைச்சாலையில் தண்டனை அனுபவித்துவருபவர்களுடன் சேர்த்துவைக்கக் கூடாது; அப்படி அவர்களுடன் சேர்த்துவைப்பதால், சமுதாயத்திற்கு சில கேடுகளை உண்டாக்கும் நிலை ஏற்படுகிறது; எனவே, அவர்களுக்கென்று தனி விடுதி அமைக்க வேண்டும்--என்பது கொள்கையளவில் ஏற்கப்பட்டிருக்கிறது.

"இளம் குற்றவாளிகளைப் பொறுத்த அளவில், அதற்கென்று தனி அமைப்பே ஏற்படுத்தப்பட வேண்டும்; அவர்களை மற்றவர்களோடு இணைப்பது சரியாகாது.

"இவைகளையெல்லாம் அரசு உணர்ந்திருக்கிறது; இதற்காகச் சட்டத்தில் மாற்றங்கள் தேவை என்றாலும், அதை நிறைவேற்ற அரசு தயாராக இருக்கிறது.

"குற்றவாளிகள் என்றும் குற்றவாளிகளாகவே இருப்பதில்லை; சந்தர்ப்பச் சூழ்நிலை -- சமுதாய அமைப்பு முறை -- பொருளாதார நிலைமை ஆகிய பல்வேறு சூழ்நிலைகளால் குற்றவாளிகள் ஆகிறார்கள்; அவர்களைத் திருத்தி நல்ல குடிமக்களாகத் திகழ நல்ல சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டியது நமது கடமையாகும்"

**என்று சட்டத்துறை அமைச்சர் செ. மாதவன் அவர்கள், தமிழ்நாடு நன்னடத்தை சீர்திருத்தக் கழகத்தின் 25-வது ஆண்டு விழாவைத் தொடங்கிவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.**

குற்றவாளிகள் துறை தலைமை அதிகாரி பி. குப்புசாமி அனைவரையும் வரவேற்றார்.

சங்கக் கௌரவச் செயலாளர் எஸ் சீனிவாசன் தலைமையமைச்சர் -- தமிழக முதல்வர் -- மற்றும் பிரமுகர்களிடமிருந்து வந்திருந்த வாழ்த்துச் செய்திகளைப் படித்தார்.

விழாச் சிறப்பு மலரை, வேளாண்மை அமைச்சர் அன்பில் தர்மலிங்கம் வெளியிட்டார்.

திரு. பி. எஸ். சார்லஸ் நன்றி கூறினார்.

### முதலிடம் பெறுகின்றனர்

அமைச்சர் மாதவன் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"குற்றவாளிகள் சீர்திருத்தத் துறையிலே உள்ளவர்கள் மிகக் குறைந்த எண்ணிக்கை உடையவர்களாக இருந்தும், துணைக் கண்டத்திலேயே குற்றவாளிகள் பற்றிய விரிவான அறிக்கை தயாரிப்பதில் முதலிடம் பெற்றவர்களாக இந்தத் துறையினர் உள்ளனர்.

75 பேர் இத் துறையில் தமிழகம் முழுவதும் பணியாற்றுவதாக அறிகிறேன்; அப்படியிருந்தும் அவர்கள், ஆயிரக்கணக்கான கைதிகளின் நன்னடத்தைப் பற்றிய அறிக்கைகளை மிகுந்த சிரமங்களுக்கிடையே தயாரித்தளிக்கிறார்கள்; அவர்களைப் பாராட்டுகிறேன்.

அவர்கள் இங்கு வந்துள்ள கோரிக்கைகளை எல்லாம் உடனடியாக ஏற்றுக்கொள்ள முடியாத நிலை இருந்தாலும் அவர்கள் இதைப் பொருட்படுத்தாது. சமூகத்திற்கு ஆற்றும் நற்பணியாகக் கருதி ஆர்வம் குன்றாது இன்னும் சிறந்த முறையில் பணியாற்ற வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

இவர்களது பணி சிறப்படைய நீதித் துறையினரும்—வழக்கறிஞர்களும் அவர்களுடன் ஒத்துழைக்க வேண்டும்."

### அன்பில் தர்மலிங்கம்

விழாச் சிறப்பு மலரை வெளியிட்டு அமைச்சர் அன்பில் தர்மலிங்கம் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"இந்த விழாவிலே குற்றங்களைக் கண்டுபிடிக்கின்ற காவல்துறை அதிகாரிகள் இருக்கிறார்கள்—குற்றவாளிகளைத் தண்டிக்கின்ற நீதிபதிகள் இருக்கிறார்கள்—குற்றங்களைத் தடுக்கின்ற, சட்டங்களைக் காக்கின்ற அமைச்சரும் இருக்கிறார்; இந்த ஒற்றுமையைக் குறிப்பிடும்போது எனக்கு இன்னொரு நினைவு வருகிறது.

நாங்கள் எதிர்க் கட்சியினராக இருந்த நேரத்தில், இன்றைய முதல்வர் கலைஞர் அவர்களும் -- சட்ட அமைச்சர் மாதவன் அவர்களும் -- நானும் -- இன்னும் பலரும் திருச்சி மத்திய சிறையில் அரசியல் காரணங்களுக்காகக் கைதிகளாக இருந்தோம்; அப்போதே சிறையில் உள்ள கைதிகளிடையே கட்டுப்பாட்டு உணர்ச்சியும் -- பொறுப்புணர்ச்சியும் ஏற்பட வேண்டுமென்பதற்காக நாங்கள் சிறைச்சாலைக்குள்ளாகவே 'மாதிரி அமைச்சரவை'யை நிறுவினோம்; கலைஞர்தான் எங்களுக்கு தலைமையமைச்சர்; மாதவன் அப்போதும் சட்ட அமைச்சர்தான்; மற்றும் முன்னணித் தோழர்கள் ஒவ்வொரு துறையை ஏற்றுக் கொண்டிருந்தார்கள்.

சிறைச்சாலை உணவிலே ஒரு குறைபாடு என்றால், உணவு அமைச்சராக இருக்கும் தலைவரிடம்தான் கூறவேண்டும்; குளிக்கவும் -- குடிக்கவும் தண்ணீர் பற்றாக்குறை ஏற்படுமானால், அது பற்றிய குறையைத் தெரிவிக்க தண்ணீர் வாரியம் அமைத்து -- அதன் தலைவராக ஒருவரை நியமித்தோம்; அவரிடம் அதைச் சொல்ல வேண்டும்; அவர்சிறை அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு குறைகளைக் களைவார்.

இப்படி நாங்கள் அன்றைக்குச் சிறைக்குள் விளையாட்டாக அமைத்த அமைச்சரவை இன்று சிறைச்சாலைக்கு வெளியே நாங்களே தமிழ்நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்கும் ஒரு நிலையை நாட்டு மக்கள் அளித்திருக்கிறார்கள்.

அப்போதே சட்ட அமைச்சர் மாதவன் அவர்கள், சிறை விதிகளில் உள்ள குறைபாடுகளையும் இன்னின்ன புதிய விதிகள் தேவை என்பதையும் முதல்வரிடத்திலும் -- எங்களிடத்திலும் கூறுவார்.

இன்றைக்கு அதே பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கின்ற அமைச்சர்மாதவன், குற்றவாளிகளைச் சீர்திருத்தும் துறையிலே சிறந்த பல வசதிகளைச் செய்து கொடுத்திருக்கின்றார்கள்.

ஒரு தடவை குற்றவாளியாக சிறைச்சாலை சென்றவர்கள் எப்போதும் குற்றவாளிகளாகவே இருப்பதில்லை; சந்தர்ப்ப சூழ்நிலை காரணமாக அவர்கள் திரும்பத் திரும்ப சிறைச்சாலைக்குள் கொண்டு வரப்படுகின்றனர்; ஆகவே, இதனை எல்லாம் கருதி, குற்றவாளிகள் தண்டனைக் காலம் முடிந்த பிறகு பொறுப்புமிக்க குடிமகனாக விளங்க வாய்ப்பு வசதிகளைப் பெருக்கிட வேண்டும்."

போர் மூண்டால்....

# பாகிஸ்தான் பகுதிக்குள் செல்லும்

### நமது படையின் கடமை

அலகாபாத், நவ. 24—

"போர் ஏற்படுமானால் பாகிஸ்தான் பகுதிக்குள் செல்லும் நமது படையினர், அங்குள்ள பெண்களைத் தாய்மார்களாகவும்--சகோதரிகளாகவும் கருத வேண்டுமென்று உத்தரவிடப்பட்டிருக்கிறது.

"பாகிஸ்தான் குடிமக்களின் சொத்துக்களிலும் கைவைக்க வேண்டாமென்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

"போர் மூண்டாலும் இயன்ற வரையில் மனிதாபிமானத்துடன் நடந்துகொள்ள வேண்டும் என்பதே இந்தியாவின் முயற்சியாக இருக்கும்"

என்று பாதுகாப்பு அமைச்சர் ஜெகஜீவன்ராம் அவர்கள், இராஜ்புரா கிராமத்தில் நடைபெற்ற ஒரு பொதுக்கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

# 'நகரங்கள் தூய்மையாக இருப்பது அவசியம்'

## அமைச்சர் நாவலர் வலியுறுத்தல்

### சென்னை மாநகராட்சியின் சிறப்புமிக்க பணிகளுக்குப் பாராட்டு

சென்னை, நவ. 26—

"நகருக்கு வரும் மக்களின் கண்ணையும் கருத்தையும் கவருவது, அந்த நகரத்தின் தூய்மையும் அழகும்தான்; வெளிநாடுகளில் நம்முடைய கண்ணையும் கருத்தையும் கவருவது அங்குள்ள நகரங்களின் தூய்மையேயாகும்.

"மிகச் சிறிய நாடான சிங்கப்பூர் மிகச் சுத்தமாகக் காட்சியளிப்பதை நான் அங்கு சென்றிருந்தபோது கண்டேன்; அந்த முறையில், சென்னை நகரையும் மிகச் சுத்தமாக வைத்துக்கொள்ளப் பொதுமக்களின் ஆதரவும் ஒத்துழைப்பும் மிகவும் தேவை.

"நமது நாடு சுதந்தரம் பெற்று அடுத்த ஆண்டோடு 25 ஆண்டுகள் முடிகிறது; சுதந்தரத்தின் வெள்ளி விழாவாக நாம் அதனைக் கொண்டாடும்போது, நகரங்களைத் தூய்மையாக வைத்துக் கொள்ளும் விழாவாக அதனைக் கொண்டாடுவது மிகவும் பொருத்தமுடையதாக இருக்கும்; வெறும் கலை நிகழ்ச்சிகளை மட்டும் நடத்தினால் பயன் தராது; இப்போதிருந்த இதில் நாம் அனைவரும் ஈடுபடவேண்டும்"

**என்று கல்வியமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், சென்னை மாநகராட்சியின் 284-வது ஆண்டுத் தொடக்க விழாவுக்குத் தலைமை தாங்கிப் பேசுகையில் சுட்டிக்காட்டிக் கேட்டுக்கொண்டார்.**

நேரு விளையாட்டு அரங்கில் நடைபெற்ற இவ்விழாவுக்கு சென்னை மாநகராட்சி மேயர் சா. கணேசன் அனைவரையும் வரவேற்றார்.

தமிழக ஆளுநர் கே. கே. ஷா அவர்கள், விழாவினைத் தொடங்கி வைத்தார்.

விழாவினையொட்டி, பள்ளிச் சிறுவர் -- சிறுமிகளின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

சென்னை நகரில் சுகாதார வசதிகளுடன் நடத்தப்படும் ஓட்டல், தனியார் மருத்துவமனை போன்றவைகளுக்கான பரிசுகளை டாக்டர் விசாலாட்சி நெடுஞ்செழியன் வழங்கினார்.

விழாவில், மாநகராட்சியின் அனைத்துக் கட்சித் தலைவர்களும் பேசினர்.

துணை மேயர் சிலார் மியான் நன்றி கூறினார்.

### சென்னை நகருக்குப் பெருமை உண்டு

கல்வி உள்ளாட்சித் துறை அமைச்சர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"இந்தியாவில் உள்ள பல நகரங்களுக்குச் சென்றுவந்தவர்கள், ஊரும், மக்கள் அமைதியாகப் பண்பட்ட வாழ்க்கை நடத்துகிறார்கள் என்று சொல்லும் பெருமை சென்னை நகருக்கு உண்டு; அந்த அளவுக்குத் தமிழகம் பரவலாகவும் -- சீராகவும் -- சிறப்பாகவும் முறையோடும் வளர்ந்து வந்துள்ளது.

மற்ற மாநிலங்களில் ஓரிரு நகரங்கள் மட்டுமே பெரும் அளவுக்கு வளர்ச்சி பெற்றிருக்கும் நிலை இருக்க, தமிழகத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் பல பெருநகரங்கள் சிறப்பான தன்மையில் வளர்ந்துள்ள நிலை இருக்கிறது.

தமிழகத்தில், 'நகரங்கள்' என்ற இலக்கணத்தை உடைய பேரூர்கள் 443 உள்ளன; ஆனால், தமிழகத்தைவிட இரண்டுமடங்கு மக்கள் தொகை கொண்டதும்-- இரண்டு மடங்கு பரப்பளவு கொண்டதுமான உத்தரப் பிரதேசத்தில், 'நகரங்கள்' என்று சொல்லும் ஊர்கள் 293 தான் இருக்கின்றன: அடுத்து, மாராட்டிரத்தில் 289-ம், குசராத்தில் 217-ம் இருக்கின்றன; ஆனால் அத்தகைய நகரங்கள் 443 இருக்கும் அளவுக்குத் தமிழகத்தில் வளர்ச்சி பரவலாக அமைந்துள்ளது.

### மக்களின் நன்மதிப்பை மாநகராட்சி பெற்றிருக்கிறது

சென்னை நகரத்தை அழகுறவைப்பதில் மாநகராட்சி மன்றம் பெருமுயற்சி செய்துவருவதை அனைவரும் அறிவர். அகன்ற சாலைகள் -- பூங்காக்கள் -- விளையாட்டு மைதானங்கள்---வானொலிப் பெட்டிகள்--படிப்பகங்கள்-- தாய் சேய் நல நிலையங்கள்-- துவக்கப் பள்ளிகள் -- உயர்நிலைப் பள்ளிகள் ஆகியவற்றை நடத்தி, மக்களின் நன்மதிப்பை பெற்று வருகிறது இந்த மாநகராட்சிமன்றம்.

குடிநீர் வசதியை மேலும் அதிகரிக்கத் தமிழக அரசின் ஒத்துழைப்புடன் வீராணம் திட்டத்தினை மேற்கொண்டு வேலைகளை நடத்திக்கொண்டு வருகிறார்கள்.

கூவம் சீரமைப்புத் திட்டத்தினை நிறைவேற்றுவதன்மூலம் நகருக்குப் புதிய பொலிவினை அளிக்கவிருக்கின்றனர்.

### பெருநகராக உருவாகும்

வரும் 20 ஆண்டுகளில் சென்னையை விரிவான நகராக--பெருநகராக ஆக்க ரூ. 186 கோடி அளவுக்குச் செலவழிக்கத் திட்டமிட்டு, சென்னையைச் சுற்றிலும் 200 சதுர மைல் அளவுக்கு உள்ள பகுதியைச் சென்னையுடன் சேர்க்கும் திட்டம் ஒன்றினைத் தயார் செய்து மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது; மத்திய அரசு ஒப்புதல் அளித்து மானியமும் -- கடனும் அளிக்குமேயானால், வரும் இருபது ஆண்டுகளில் சென்னை நகர வசதி வாய்ப்புக்களைப் பெருக்கி -- மக்களுக்கு வசதி, வளம், நிம்மதி கொண்ட--கவலையற்ற வாழ்வு அளிக்க முடியும்.

### குழுவின் பரிந்துரைகளை நன்கு பரிசீலனை செய்வோம்

மாநகராட்சியின் வருவாயை எப்படி எப்படிப் பெருக்கலாம்--வரி மூலம் வருமானத்தையும், வரியில்லாத வருமானத்தையும் எப்படி எப்படிப் பெருக்கலாம் என்பதைக் கண்டு ஆராய உயர்மட்டக் குழு ஒன்றினை அரசு நியமித்து, அந்தக் குழு தன் அறிக்கையை அரசுக்கு அளித்துள்ளது; அந்த அறிக்கை, அரசின் பரிசீலனையில் உள்ளது; குழுவின் பரிந்துரைகளையும் அரசு அனுதாபத்துடன் பரிசீலிக்கும் என்பதையும் சொல்லிக்கொள்கிறேன்.

### மாநகராட்சி ஊழியர்களுக்கு இரண்டாவது ஊதியக் குழு

மாநகராட்சியில் பணிபுரியும் ஊழியர்களுக்கு இரண்டாவது ஊதியக் குழு அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை அரசுக்கு வந்துள்ளது; அதுவும் பரிசீலிக்கப்பட்டு -- எதையெதை நிறைவேற்ற வேண்டுமோ அவற்றை அரசு நிறைவேற்றும் என்பதையும் இன்றையத் தினம் உங்களிடம் சொல்லிக்கொள்கிறேன்.

### மேயருக்குத் தனி இல்லம்

மேயர் அவர்களுக்கென்று தனியாக ஓர் இல்லம் இருக்க வேண்டியதன் அவசியத்தை அனைவரும் உணர்ந்திருக்கிறோம்; அரசும் இப்போது உணர்ந்திருக்கிறது; அதுவும் விரைவில் நிறைவேற்றப்படும்.

தனி இல்லம் கட்டி முடிக்கப்படும் வரையில் காத்திராது இப்போதே தற்காலிகமாக ஓர் இல்லத்தை மேயருக்கு என்று ஏற்பாடு செய்வது நலமாகும்."

### ஆளுநர் கே. கே. ஷா

தமிழக ஆளுநர் கே. கே. ஷா விழாவைத் துவக்கிவைததுப் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"இன்னும் பத்தாண்டுக் காலத்தில் சென்னை நகர மக்கள் தொகை 40 இலட்சமாக உயரக் கூடும்; இதனை மனத்தில் கொண்டு, சென்னை நகர் விரிவமைப்பு ஏற்பாடுகளை இப்போதே திட்டமிட்டுச் செய்ய வேண்டும்; இதற்கு மத்திய அரசின் நிதியுதவியைப் நாடிப் பெறலாம்.

நகரில் பகுதிவாரியாகத் துப்புரவு இயக்கம் நடைபெற வேண்டும்; இதில், மாநகராட்சி உறுப்பினர்களும் -- பொதுமக்களும் சிறந்த முறையில் ஒத்துழைக்க வேண்டும்."

# குழந்தைகள் நலனுக்கு வழங்கும் சத்துணவைச் சாப்பிட்டுவிடும் பெரியவர்கள்!

### அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் வேதனை

சென்னை, நவ. 26—

"குழந்தைகளுக்காகக் 'கேர்' -- 'யூனிசெப்' போன்ற நிவாரண நிறுவனங்கள் இலவசமாக வழங்கும் சத்துணவைப் பெரும்பாலும் பெரியவர்களே சாப்பிட்டுவிடுவதாகத் தெரிகிறது"

என்று உள்ளாட்சித் துறை அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் கூறினார்.

சென்னை வியாசர்பாடியில், மாநகராட்சியால் நிறுவப்பட்ட மகப்பேறு விடுதியை அவர் திறந்து வைத்துப் பேசுகையில் கூறியதாவது :—

"குழந்தைகள் நலத்திற்காகப் பல நிறுவனங்கள் சத்துணவை வழங்குகின்றன; ஆனால் பல சமயங்களில், பெரியவர்களே இந்த உணவைச் சாப்பிட்டுவிடுகின்றனர்; சத்துணவு இல்லாமல் போனால், குழந்தைகள் உடலும் மனமும் ஊக்கம் பெறாது.

"மக்கள் தொகைப் பெருக்கத்தைத் தடுப்பதற்குக் குடும்ப நலத் திட்ட முறைகளைக் கைக்கொள்ள வேண்டும்.

பொது இடங்களில் குடிசைகள் கட்டிக்கொள்வது கூடாது.

இராணுவ நிலங்களிலும், இடுகாடுகளிலும் கூடத் 'திடீர் குடிசை'கள் தோன்றுகின்றன; இது தாங்கமுடியாத தொல்லையாகிவிடும்."

இந்த விழாவிற்கு சென்னை மேயர் சா. கணேசன் தலைமை தாங்கினார்.

# அசாமில் 12,818 பாகிஸ்தானியர் ஊடுருவினராம்

புதுடில்லி, நவ. 25—

"1968, 1969, 1970 ஆகிய மூன்று ஆண்டுகளில் 12,818 பாகிஸ்தானிகள் அசாமில் ஊடுருவியிருக்கின்றனர்; இவர்களில் 11,452 பேர் கைது செய்யப்பட்டுத் திருப்பி அனுப்பப்பட்டனர்"

என்று மக்களவையில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் உள்துறை துணையமைச்சர் ஆர். என். மிர்தா தெரிவித்தார்.

# நேரு விளையாட்டரங்கில் மாணவ -- மாணவிகள் அணிவகுப்பு

## கண்கொள்ளாக் காட்சிகளைக் கண்ணிமைக்கும் நேரத்தில் செய்துகாட்டினர்

### தண்ணீரில் மூழ்கியவர்களைக் காப்பாற்றியவர்கட்குத் தயாளு கருணாநிதி பரிசுகள் வழங்கினார்; விழாவில் அமைச்சர்கள் நாவலர் -- பேராசிரியர் பங்கேற்பு

சென்னை, நவ. 26—

சென்னையில் உள்ள தொடக்க – உயர்நிலைப் பள்ளி மாணவ – மாணவிகளின், 'குழந்தைகள் நாள் அணிவகுப்பு விழா' சென்னை--நேரு விளையாட்டு அரங்கில் நடைபெற்றது.

முதலில், மாணவ–மாணவியரின் அணிவகுப்பு நடந்தது; அணிவகுப்பு மரியாதையைக் கல்வி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் ஏற்றுக்கொண்டார்.

பிறகு, மாணவ–மாணவியரின் உடற்பயிற்சி நடைபெற்றது; இதில் மொத்தம் 10,000 மாணவ – மாணவியர் கலந்துகொண்டனர்.

பண்டித நேருவின் 82-வது பிறந்த நாளைக் குறிக்கும் வகையில் மாணவிகள், '82'போல் வரிசையாக வளைந்து நின்றனர்; அதே நேரத்தில், 'வெல்க தாயகம்' என்று எழுதியதைப்போல் மாணவியர் அமர்ந்திருந்த காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

அடுத்தடுத்து, தேர் -- உதய சூரியன -- தீபம் -- இந்தியா -- வங்காள அகதிகள் இந்தியாவுக்கு வருவது -- அவர்களுக்கு இந்தியா அடைக்கலம் அளிப்பது போன்ற காட்சிகளை, மாணவ – மாணவியர் கண் இமைக்கும், நேரத்தில் செய்து காட்டிப் பாராட்டுப் பெற்றார்கள்.

கடந்த ஆகஸ்டு மாதம் கும்பகோணம் காவிரி ஆற்றில் ஒரே நேரத்தில் மூழ்கிய நான்கு பேரைக் காப்பாற்றிய சூரியநாராயணன், செங்கற்பட்டு மாவட்டம் கூவம் கிராமத்தில் குளத்தில் மூழ்கிய 2 பெண்களைக் காப்பாற்றிய வி. அண்ணாத்துரை ஆகிய 2 மாணவர்கட்கும் இந்த விழாவில் தமிழக அரசின் சார்பில் வெள்ளிக் கோப்பைகள் பரிசாக வழங்கப்பட்டன.

முதல்வர் கலைஞர் அவர்களின் துணைவியார் தயாளு அம்மாள் பரிசுகளை வழங்கினார்.

மற்றும், அணிவகுப்புக்களிலும் -- உடற் பயிற்சிகளிலும் சிறந்து விளங்கிய பள்ளிகட்கும் பரிசுகள் வழங்கப்பட்டன.

### அமைச்சர்கள் பங்கேற்பு

விழாவுக்கு அமைச்சர் க. அன்பழகன் அவர்கள் தலைமைதாங்கினார்.

அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், விழாவைத் துவக்கி வைத்துப் பேசினார்.

மேயர் சா. கணேசன் வரவேற்றார்.

அனைத்திந்திய குழந்தைகள் நலக் குழுக் தலைவி மஞ்சுபாசினி நன்றி கூறினார்.

## அட்லி நினைவு மண்டபம்

### இந்தியாவிலிருந்து சலவைக் கற்கள்

இலண்டன், நவ. 23—

இந்தியா விடுதலை பெற உதவிய மறைந்த பிரிட்டிஷ் தலைமையமைச்சர் அட்லி பிரபுவின் நினைவாக 'அட்லி மண்டபம்' ஒன்று இலண்டனில் கட்டப்பட்டுள்ளது; நவ. 18-ந் தேதியன்று பிரிட்டிஷ் அரசி எலிசபெத் இந்த நினைவு மண்டபத்தைத் திறந்து வைத்தார்.

இந்த நினைவு மண்டபம் கட்டுவதில் இந்தியா பெரும் அளவில் உதவி செய்திருக்கிறது. மண்டபத்திற்காக ஜெய்ப்பூர் சலவைக் கல் மற்றும் உயர் வேலைப்பாடுள்ள தரை விரிப்புகள் ஆகியவற்றை இந்தியா அனுப்பி உதவியிருக்கிறது.

# 1969-ம் ஆண்டில் பிடிபட்ட உளவாளிகள்

புதுடில்லி, நவ. 25—

பாகிஸ்தானுக்கும் -- சீனாவுக்கும் உளவு பார்த்ததாக 1969-ம் ஆண்டில் 117 பேர் பிடிபட்டார்கள்; அவர்களில் 76 பேர் இந்தியர்கள்; 33 பேர் பாகிஸ்தானியர்; 4 பேர் திபேத்தியர்; 4 பேர் பாகிஸ்தான்வசம் உள்ள காஷ்மீர் பகுதியைச் சேர்ந்தவர்கள்.

இத்தகவலை நாடாளுமன்றத்தில், உள்துறைத் துணையமைச்சர் எப். எச். மோசின் தெரிவித்தார்.

# சம்பளக் குறைப்பு மூலம் கிடைக்கின்ற மிச்சம்

புதுடில்லி, நவ. 25—

"மத்திய அமைச்சர்கள் தாமாகச் செய்துகொண்ட சம்பளக் குறைப்பு மூலம், மாதத்துக்கு ரூ. 9,812 மிச்சமாகிறது; காபினெட் அமைச்சர்கள் 10 சதவிகிதமும், துணையமைச்சர்கள் 5 சதவிகிதமும் குறைத்துக் கொண்டிருக்கிறார்கள்"

என்று மக்களவையில், உள்துறை துணையமைச்சர் மோசின் தெரிவித்தார்.

# சென்னை நகர பஸ் போக்குவரத்தில் டிச. 1-ம் நாள் முதல் புதிய ஏற்பாடு

சென்னை, நவ. 26—

"சென்னை நகர பஸ் போக்குவரத்தில், பஸ்கள் நிறுத்துவதற்காக ஏறத்தாழ 2,000 'ஸ்டாப்'புகள் (நிற்குமிடங்கள்) இருக்கின்றன; இதில் 50 இடங்களைத் தேர்ந்தெடுத்து – அந்த இடங்களில் பஸ்கள் கட்டாயம் நின்றுதான் போகவேண்டும் என்று ஏற்பாடு செய்திருக்கிறோம்; ஏறி – இறங்குவதற்குப் பயணிகள் இருந்தாலும் இல்லாவிட்டாலும், நின்றுதான் போகவேண்டும்; இதற்கு வசதியாக அந்த இடங்களில், 'கியூ' வரிசைக்கான சிமெண்டுத் தடுப்புச் சுவர்கள் கட்டப்பட்டிருக்கின்றன.

"இத்தத் திட்டம் டிசம்பர் 1-ம் நாள்முதல் நடைமுறைக்கு வருகிறது; இந்தத் திட்டத்தின்படி, பஸ்கள் பிளாட்பாரத்தையொட்டி ஓரமாக வந்து நிற்கும்; 3 -- 4 பஸ்கள் அந்த இடத்துக்கு ஒரே நேரத்தில் வந்தாலும், ஒவ்வொரு பஸ்சும், அந்தக் 'கியூ'வின் வாசலில் வந்து நின்றுவிட்டுத்தான் போகவேண்டும்; இதற்காக அந்தப் பஸ் 'ஸ்டாப்'புகளில் டிக்கெட்டு கொடுக்கும் கண்டக்டர்கள் இருப்பார்கள்; பஸ் போக்குவரத்தை ஒழுங்குபடுத்தும் 'செக்கிங் இன்ஸ்பெக்டர்'களும் இருப்பார்கள்.

"பயணிகள் வரிசையாக நின்று பஸ் ஏறுவதற்குச் சீரணித் தொண்டர்களும் ஒத்துழைப்பார்கள்; குறிப்பாகக் காலை 8-மணி முதல் 11-மணி – மாலை 4-மணிமுதல் 7-மணி ஆகிய நெருக்கடி நேரத்தில்தான், போக்குவரத்துத் துறை அதிகாரிகள் அந்த இடங்களில் நிற்பார்கள்.

"தொழிற் சங்கப் பிரதிநிதிகளும், இந்த வகையில் போக்குவரத்துத் துறையுடன் ஒத்துழைக்க ஒப்புதல் தெரிவித்திருக்கிறார்கள்; ஆகவே, பொதுமக்களும் இந்த வகையில் ஊழியர்களுடன் ஒத்துழைத்து, 'கியூ' வரிசையில் வந்து பஸ்களில் ஏறிப் பயணம் செய்து, இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக ஆக்கினால், இதை மேலும் பல 'ஸ்டாப்'புகளுக்கு விரிவுபடுத்தலாம்.

"அரசாங்கப் பஸ் போக்குவரத்தில் நெருக்கடி நேரத்தில், குறிப்பிட்ட அளவு எண்ணிக்கையைவிட, 100-க்கு 10 -- 15 சதவிகிதம் அதிகப் பஸ்கள் விடப்படுகின்றன; மதுரை டி. வி. எஸ். நிறுவனத்தார், நெருக்கடி நேரங்களில் 100-க்கு 100 அதிகப் பஸ்கள் விடுகிறார்கள்; ஆகவே, சென்னை நகரப் பஸ் போக்குவரத்திலும் இனிமேல் நெருக்கடி நேரத்தில் அதிகப்படியாக 100-க்கு 15 பஸ்களுக்குப் பதிலாக 100-க்கு 30 பஸ்கள் அதிகம் விடப்போகிறோம்.

"காலை -- மாலை வேளைகளில் நெருக்கடி நேரமான மொத்தம் 4-மணி நேரத்தில், 6½ இலட்சம் பேர் பஸ்களில் பயணம் செய்கிறார்கள்; ஒரு நாள் முழுவதும் கணக்கெடுத்தால் 10 இலட்சம் பேர் பயணம் செய்கிறார்கள்; இதற்காகத் தினசரி 650 பஸ்கள் -- பல 'டிரிப்'புகள் வீதம் ஓடுகின்றன.

"தொழிலாளர்கள் போய்வருவதற்கு வசதியாக எந்தெந்த வகையில் பஸ் போக்குவரத்தைச் சீரமைக்கலாம் என்பது பற்றிய கணக்கெடுப்பு இன்று முதல் தொடங்குகிறது; எந்தெந்த நேரங்களில் 'ஷிப்டு' முடிகிறது -- எந்தத் திசையில் அதிகப் போக்குவரத்து இருக்கிறது -- எந்த இடத்தில் அதிகத் தொழிலாளர்கள் ஏறி இறங்குகிறார்கள் -- என்பது பற்றிக் கணக்கு எடுக்கிறார்கள்.

"தங்கசாலைக்கும் -- எண்ணூருக்கும் இடையே; உயர் நீதிமன்றத்துக்கும் -- திருவொற்றியூருக்கும் இடையே; தங்கசாலைக்கும் -- திருவொற்றியூருக்கும் இடையே உள்ள 'ரூட்'களில் இந்தக் கணக்கெடுப்பு நடக்கிறது; இதில் பொதுமக்களும் -- தொழிலாளர்களும் ஒத்துழைத்து, உரிய தகவல்கள் கொடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

"24 மணி நேரத்திற்கும் எந்த அளவுக்குப் பஸ்கள் தேவை என்ற கணக்கைத் தயாரிக்கிறார்கள்; இந்த மாதம் முடிவதற்குள் இந்தக் கணக்கெடுப்பு முடிந்துவிடும்; அதுவரையில், தண்டையார்பேட்டையிலிருந்து எண்ணூருக்கு அரை மணி நேரத்திற்கு ஒரு 'ஷட்டில்' பஸ் வீதம் விடப்படும்.

"எக்ஸ்பிரஸ் பஸ்கள் 6 ஆண்டுக்குமேல் ஓடிவிட்டால் -- புதிய பஸ்கள் மாற்றும் திட்டத்தின்படி -- அந்தப் பழைய பஸ்கள் அதிகப்படியாக நமக்கு கிடைக்கின்றன; அவையெல்லாம் 'ஸ்பேர் பஸ்'களாகப் பயன்படுத்த உதவுகின்றன.

"இப்படிப் பஸ்கள் அதிகமாக கிடைப்பதால், 'ஸ்பேர் பஸ்'கள் வைத்துக் கொள்ளும் அளவை 15 சதவிகிதமாக உயர்த்த உத்தரவிட்டிருக்கிறோம்."

**--அமைச்சர் எஸ். இராமச்சந்திரன்**

(செய்தியாளர்களிடம்)

# நயாகராவில் கலைஞர்

## நீர்வீழ்ச்சியைக் கண்டுகளித்தார்

### விவசாயிகளுடன் கூடி விருந்துண்டார்

வாஷிங்டன், நவ. 26—

உலகத்திலேயே அழகான நயாகரா நீர்வீழ்ச்சியைத் தமிழக முதல்வர் கலைஞர் பார்வையிட்டார்.

தமிழக வேளாண்மை அமைச்சர் அன்பில் தர்மலிங்கம், நேற்று மாலை தொலைபேசிமூலம் தொடர்பு கொண்டு கலைஞருடன் பேசினர்; அப்போது அமெரிக்காவில் காலை நேரம்.

நயாகரா நீர்வீழ்ச்சியைப் பார்க்கப் புறப்பட்டுக்கொண்டிருப்பதாகவும், அங்கு நடைபெறும் விவசாயிகள் விழாவில் கலந்து கொள்ளப்போவதாகவும், இது தமிழ்நாட்டுப் பொங்கல் விழா போன்றது என்றும் கலைஞர் தெரிவித்தார்.

பகல் உணவை விவசாயிகளுடன் சேர்ந்து சாப்பிடப்போவதாக அவர் சொன்னார்.

முதலமைச்சரின் உடல் நலம் பற்றி அன்பில் தர்மலிங்கம் விசாரித்தார்; நன்றாகக் குணமடைந்துவிட்டதாக முதலமைச்சர் தெரிவித்தார்.

## நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

**28--11--71**

**சிவகாசி**

கலைஞர் கருணாநிதி மன்ற ஆண்டு விழாவும்--பொள்ளாச்சி வெற்றி விழாவும்; மாலை 7 மணிக்கு மேல ரத வீதியில்; தலைவர்: ஆர். சங்கையன்; பேசுவோர்: ஆ. திராவிடமணி, கா. காளிமுத்து எம்.எல்.ஏ, ஏ. துரைக்கண்ணன், வே. கருணாகரன், சி. பெ. குருசாமி, எஸ்.பி. மணியம், எஸ்.ஏ. இரசாக் எம்.சி., வெ. வேலாயுதம், வ. சு. குருசாமி, இரா. சங்கீத திலகம்.

**பம்பாய்**

திராவிடர் கழகச் சார்பில் மாலை 7-30 மணிக்கு கணேசர் திடலில்; தலைவர்: ஆர். ஏ. சுப்பையா; பெரியார் படத் திறப்பாளர்: எஸ். தியாகராசன்; பேசுவோர்: பட்டுக்கோட்டை இளவரி, பொ. தொல்காப்பியனா, பெ. மந்திரமூர்த்தி, ம. சு. இசக்கி, டி. ஏ. கே. குழந்தை, டி.ஏ. வான்மதி, வி.எம். கணபதி.

**கரூர்**

நகர தி.மு.க. சார்பில் மாலை 7 மணிக்கு பசுபதீசுவரன் கோயில் முன்பு; தலைவர்: என். கே. காந்தி; பேசுவோர்: அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன், சட்டப் பேரவைத் தலைவர் கே. ஏ. மதியழகன், வேளாண்மை அமைச்சர் அன்பில் தர்மலிங்கம், மற்றும் சட்டமன்ற -- நகர் மன்ற உறுப்பினர்கள்.

**வடலூர்**

தி. மு. க. சார்பில் மாலை 7 மணிக்கு குறுக்குச் சாலையில்; தலைவர்: ச. தங்கராசு; பேசுவோர்: நன்னிலம் அ. நடராசன், ஏ. வி. தண்டபாணி, என். இராசாங்கம் எம்.எல்.ஏ., மு. தட்சிணாமூர்த்தி, கு. வே. பட்டாபு, க. நாராயணசாமி, கே. சி. மூர்த்தி. அ. சான்கான், அ. இலக்குமணன், த. வைத்தியநாயன், வே. பழனிவேல், வி முத்தையன், ம. வேலு.

உணவு -- வருவாய்த் துறை அமைச்சர்

### ப. உ. சண்முகம்

**நிகழ்ச்சிகள்**

நவ. 27 மாலை 6-மணி: வேலூர்—பொதுமக்கள் வரவேற்பு; இரவு 7-மணி: மகளிர் மனமகிழ் மன்ற 44-வது ஆண்டு விழா தலைமை.

நவ. 29 காலை 10 மணி: இடையமேலூர் (சிவகங்கை வட்டம்)—பர்மா அகதிகள் காலனி திறப்பு; 11 மணி: சிவகங்கை—பொதுமக்கள் வரவேற்பு; பிற்பகல் 12-30 மணி: அரமனை சிறுவயல்—சருகணி ஆற்றின் அணைக்கட்டு கால்கோள் விழா; மாலை 4-30 மணி: சிங்கம்புணரி—பெண்கள் உயர்நிலைப் பள்ளி கட்டடத் திறப்பு; 6-மணி: நெற்குப்பை—ஆரம்ப சுகாதார நிலையப் பிரசவ வார்டு திறப்பு -- குடும்ப நலத் திட்ட கட்டடக் கால்கோள் விழா -- உயர்நிலைப் பள்ளிக் கட்டடத் திறப்பு; இரவு 7-30 மணி: திருப்பத்தூர் -- பொதுக்கூட்டம்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு வழிவி அச்சகத்தில் (24, [illegible] செங்கற் [illegible], சென்னை-18) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

# நாச விளைவைத் தேடிக் கொள்ள வேண்டாம்

## பாகிஸ்தானுக்கு இரஷ்யா எச்சரிக்கை

**"இந்தியத் துணைக் கண்டத்தில் போர்ச் சூழ்நிலை ஏற்படச் செய்ய வேண்டாம்" என்று இரஷ்யா பாகிஸ்தானுக்கு மீண்டும் அவசர வேண்டுகோள் விடுத்திருக்கிறது.**

**"பிரச்சினைகளுக்குச் சமாதான அரசியல் வழிகளில் தீர்வு காண வேண்டும் என்ற உலக நாடுகளின் ஆலோசனையை இலட்சியம் செய்யாமல், தனது போர் வழியைப் பாகிஸ்தான் நீடித்தால், நாசகரமான விளைவுகள் ஏற்படும்" என இரஷ்யா எச்சரித்திருக்கிறது.**

அவசர நிலை பிரகடனத்துக்குப் பின், இரஷ்யத் தூதர், அதிபர் யாகியா கானைச் சந்தித்தார்.

வங்கச் சுதந்தரத்துக்காகப் போராடும் தலைவர்களுடன் அரசியல் உடன்பாட்டுக்கு வருமாறு கோரும் குறிப்பு ஒன்றை இரஷ்யா அளித்ததாக இராவல்பிண்டி வட்டாரங்கள் கூறின.

# தமிழ் மக்களின் கோரிக்கைக்கு டில்லி கைவிரிப்பு

## பாரதிதாசன் அஞ்சல்தலை இல்லையாம்

புதுடில்லி, நவ. 26—

**புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் உருவம் பொறித்த அஞ்சல் தலை வெளியிட மத்திய அரசு மறுத்துவிட்டது.**

பாரதிதாசன் அஞ்சல்தலை வெளியிட வேண்டும் என்று, தமிழ் மக்கள் நீண்ட காலமாக வற்புறுத்தி வருவது தெரிந்ததே.

நாடாளுமன்ற மேலவையில் இதுபற்றி தி. மு. க. உறுப்பினர்களான தில்லை வில்லாளன், எஸ். சிவப்பிரகாசம் இருவரும் கேட்டனர்.

அதற்குப் பதில் அளித்த அஞ்சல் துறை அமைச்சர் பருகுண கூறியதாவது:—

"1971-ல் பாரதிதாசன் அஞ்சல் தலை வெளியிட வேண்டும் என்ற கோரிக்கை பற்றி அஞ்சல் துறை ஆலோசனை நடத்தியது.

"ஆனால் பாரதிதாசன் உருவம் பொறித்த தலை வெளியிட வேண்டும் என்று அந்தக் குழு பரிந்துரை செய்யவில்லை.

"எனவே, இந்த ஆண்டு பாரதிதாசன் அஞ்சல்தலை வெளியிடப்படமாட்டாது."

சட்டப் பேரவைத் தலைவர்

### கே. ஏ. மதியழகன்

**நிகழ்ச்சிகள்**

நவ. 28 காலை 9-மணி: கரூர்—நகரமன்ற வரவேற்பு; மாலை 4-மணி: கரூர்—நகரக் கூட்டுறவு வங்கி வரவேற்பு; 4-30 மணி: பகுத்தறிவாளர் கழக வரவேற்பு; 6-மணி: அண்ணா பிறந்த நாள் விழாப் பொதுக்கூட்டம்.

நவ. 29: சேலம்.

பொதுப்பணித் துறை அமைச்சர்

### எஸ். ஜே. சாதிக்பாட்சா

**நிகழ்ச்சிகள்**

நவ. 27 காலை 10 மணி: பவானி—அரசினர் மருத்துவமனை திறப்பு.

நவ. 28: மேட்டூர் அணைப் பகுதிகளைப் பார்வையிடுதலும் -- அதிகாரிகளுடன் கலந்துரையாடலும்.

நவ. 29, 30: உடுமலைப்பேட்டை தொகுதி நிகழ்ச்சிகள்.

வேளாண்மைத் துறை அமைச்சர்

### அன்பில் தர்மலிங்கம்

**நிகழ்ச்சிகள்**

நவ். 27 முற்பகல்: விருதுநகர்—சட்டமன்ற உறுப்பினர் ஏற்படுத்தியுள்ள நிகழ்ச்சிகள்; பிற்பகல் 3-30 மணி: விருதுநகர் வேளாண்மை வளர்ச்சிக் கூட்டுறவுச் சங்க வெள்ளிவிழா.

நவ. 28: அந்தநல்லூர்—ஜான்டீர் கம்பைன் அறுவடைக் கருவி செயல் விளக்கும் விழா; 5-30 மணி; கரூர்.

# இடையில் போரை நிறுத்தமாட்டோம்

## தலைமையமைச்சர் அறிவிப்பு

புதுடில்லி, நவ. 26—

**"இந்தியாமீது பாகிஸ்தான் தாக்குதல் நடத்திப் போர் ஏற்பட்டுவிட்டால், அதன் பிறகு இடையில் போரை நிறுத்த மாட்டோம்; போரை நிறுத்துவதற்காக, 'தாஷ்கண்டு உடன்பாடு'போல் எந்தவித சமரச முயற்சிக்கும் சம்மதிக்க மாட்டோம்"**

என்று தலைமையமைச்சர் இந்திரா காந்தி, நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் பேசுகையில் உறுதியுடன் தெரிவித்தார்.

### படத் திறப்பு விழா

1970—71-ஆம் ஆண்டு அரசினர் விருதுபெற்ற மாநகராட்சி உயர் துவக்கப் பள்ளித் தலைமையாசிரியர்கள் மூவரின் உருவப் படங்களை (மேயரால் அன்பளிப்பாக வழங்கப்பட்டவை), 27—11—71 மாலை 4-மணிக்கு மாநகராட்சி நேரு விளையாட்டரங்கில் திரு. ம. பொ. சிவஞானம் திறந்துவைப்பார்; இவ்விழா கந்தசாமி கல்லூரி முதல்வர் திரு. ம. கி. தசரதன் முன்னிலையில் நடைபெறும்.

# டாங்கிகளுடன் எதிரிகள் நம்மை நோக்கி வருகையில்....

புதுடில்லி, நவ. 26—

"இந்தியா - பாகிஸ்தான் எல்லையைக் கடந்து பாகிஸ்தான் பகுதிக்குள் நுழையக் கூடாது என்று நமது இராணுவத்திற்கு முன்பு கட்டளை பிறப்பிக்கப்பட்டிருந்தது; அதில் இப்போது மாறுதல் செய்யப்பட்டிருக்கிறது; 'எதிரி தாக்க வந்தால், தற்பாதுகாப்புக்காகப் பாகிஸ்தான் பகுதிக்குள் நுழைந்து போரிடலாம்' என்று அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது.

"எதிரிகள் டாங்கிகளுடன் நம்மை நோக்கிப் பாய்ந்து வரும்போது, அதைப் பார்த்துக்கொண்டு சும்மா இருக்கும்படியா நமது இராணுவத்திடம் சொல்ல முடியும்? அதை எதிர்த்துச் சென்று தாக்கி முறியடித்து வரும்படிதானே கூறமுடியும்?

கடந்த திங்கட்கிழமை பாகிஸ்தான் இராணுவம் டாங்கிப் படையுடன் வந்தபோதுதான், நமது இராணுவம் முதன்முதலாக எல்லையைத் தாண்டிச் சென்று போரிட்டது.

"பாகிஸ்தான் எல்லைக்குள் 'சிறிது தூரம்' வரையில் நமது படை சென்றது; ஆனால், 'இவ்வளவு தூரம்தான் உள்ளே போக வேண்டும்' என்று முன்கூட்டியே நாம் உத்தரவு போட முடியாது; 'எவ்வளவு தூரம் போக வேண்டும்' என்பதை அவ்வப்போது தளபதிதான் முடிவு செய்ய வேண்டும். போலீசுக்குக் கூடத் தற்காப்பு உரிமை இருக்கிறது என்பதை உணரவேண்டும்.

"இந்திய விமானங்களையும் - டாங்கிகளையும் வீழ்த்திவிட்டதாகப் பாகிஸ்தான் வானொலி கூறியிருக்கிறது; இது பொய்; நமது தரப்பில் ஒரு விமானத்தையும் நாம் இழக்கவில்லை; ஒரு டாங்கி கூட நாசமாகவில்லை.

"டாங்கி சண்டையின்போது, ஓரிரு இந்திய டாங்கிகளுக்கு லேசாகச் சேதம் ஏற்பட்டது; ஆனால் எல்லா டாங்கிகளும் பத்திரமாகத் திரும்பிவந்துவிட்டன; திங்கட்கிழமை பகலில் தொடங்கிய இந்தச் சண்டை, இரவுக்குள் முடிந்து, உடனேயே நமது டாங்கிப் படை திரும்பி வந்துவிட்டது.

"இந்தியா சுட்டு வீழ்த்திய 3 விமானங்களின் விமானிகளில் 2 விமானிகள், 'பாரசூட்' மூலம் இந்தியப் பகுதிக்குள் இறங்கியபோது பிடிபட்டார்கள்; 3-வது விமானி பாகிஸ்தான் பகுதிக்குள் இறங்கிவிட்டார்; அதேபோல், நாம் சுட்டு வீழ்த்திய 3 விமானங்களும் பாகிஸ்தான் பகுதிக்குள்தான் நொறுங்கி விழுந்தன."

—இந்திய இராணுவப் பேச்சாளர்

# ஆக்கிரமடைந்துள்ள பாகிஸ்தான்

## சீனாவின் 'மிக்' விமானங்களைப் பயன்படுத்துகிறது

**"தனது மூன்று போர் விமானங்கள் சுட்டுவீழ்த்தப்பட்டதால் ஆத்திரமடைந்திருக்கும் பாகிஸ்தான், இப்போது கிழக்குப் பகுதியில் பெரிய விமானங்களைப் பறக்கவிட்டிருக்கிறது; இவைகள் பெரும்பாலும் சீனாவின் 'மிக்' விமானங்களாக இருக்கக்கூடும்"**

என்று தலைமையமைச்சர் இந்திரா காந்தி, எதிர்க் கட்சித் தலைவர்களைச் சந்தித்துப் பேசியபோது தெரிவித்தார்.

# முஸ்லிம் நாடுகளிடம் பாகிஸ்தான் தூது

## போர் மூண்டால் உதவும்படி கோரிக்கை

மொராக்கோவுக்கு வருகை தந்திருக்கும் பாகிஸ்தான் தூதுக்குழுத் தலைவர் முகமது அலி, 'போர் மூண்டால் பாகிஸ்தானுக்குச் சீனா உதவி செய்யும்' என்று கூறியிருக்கிறார்; இவர் ஐ. நா.-வில் பாகிஸ்தான் பிரதிநிதியாக இருக்கிறார்.

சீனா -- பாகிஸ்தான் எல்லையில் பருவ நிலை மோசமாகி இருந்தால்கூட, 'போர் மூண்டால் பாகிஸ்தானுக்குச் சீனா உதவி செய்யும்' என்று உறுதி கூறியிருப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும் அவர், துருக்கி -- இரான் -- மொராக்கோ மற்றும் முஸ்லிம் நாடுகளிடம் ஆதரவு பெறவும் பாகிஸ்தான் முயன்றுவருவதாகத் தெரிவித்தார்.

முஸ்லிம் அல்லாத நாடுகளும் தங்களுக்கு ஆதரவு தந்துகொண்டிருப்பதாகவும், ஏனெனில், ஓர் ஆக்கிரமிப்பைச் சமாளித்துக்கொண்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

# சீனாவைக் காட்டி மிரட்டுகிறார் யாகியா கான்

## பாகிஸ்தான் தனது முழுச் சக்தியையும் பயன்படுத்துமாம்

**"மீண்டும் திரும்ப முடியாத நெருக்கடிக் கட்டத்துக்கு இந்தியா -- பாகிஸ்தான் உறவுநிலை சென்றுவிட்டது"**

என்று அதிபர் யாகியா கான் கூறியிருப்பதாகப் பாகிஸ்தான் வானொலி அறிவித்தது.

**"கிழக்குப் பாகிஸ்தானில் இந்தியா ஆக்கிரமிப்புச் செய்து துணைக்கண்டத்தின் அமைதிக்குத் தீங்கு செய்துவருகிறது; தனது கௌரவத்தை யும் -- ஒருமைப்பாட்டையும் காக்கத் தனது முழுச் சக்தியையும் பயன்படுத்த பாகிஸ்தான் உறுதி கொண்டிருக்கிறது"**

என்று அதிபர் யாகியா கான் அறிவித்தாராம்.

சீனாவின் உதவியுடன் கன இயந்திரத் தொழிற்சாலை ஒன்றைத் துவக்கிவைத்து யாகியா கான் பேசியிருக்கிறார்; சீன அமைச்சர் ஒருவரும் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டிருக்கிறார்.

எந்த வெளிநாட்டு ஆக்கிரமிப்பு ஏற்பட்டாலும், அதற்கு எதிராகப் பாகிஸ்தானுக்கு முழு ஆதரவு அளிக்க சீனா உறுதி கூறியிருப்பதாக யாகியா கான் கூறியிருக்கிறார்.

சீன அமைச்சரும் தங்கள் ஆதரவை உறுதிப்படுத்தியிருக்கிறார்; 'நாடுகளுக்கிடையே ஏற்படும் எல்லாத் தகராறுகளையும் அமைதியான முறைகளின் மூலம் தீர்த்துக்கொள்ளவேண்டுமென்றே சீனா விரும்புகிறது" என்று அவர் தெரிவித்திருக்கிறார்.